**JM II Court, Erode** **Dt.29.07.2026**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No. 281/2026

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 29-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.ராஜ்குமார், குற்றவியல் நீதிமன்றம் எண்.II, ஈரோடு அவர்களால் ஆணையிடப்பட்டு, திரு.T.சரவணகுமார், பலகை எழுத்தர் நிலை - III அவர்கள் மூலமாக சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சியிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

Deposition of Witness PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மாதேஷ்வரன் | தொழில் | : |
| த/க பெயர் | : | வயது | : |
| அலைபேசி | : | முகவரி | : |
| ஆதார் எண் | : | | |

**A2 present. A1 absent. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஈரோடு நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக கடந்த 11.12.2025 அன்று பணியில் இருந்த போது நிலைய குற்ற தடுப்பு நடவடிக்கையாக மதியம் 12. 45 மணிக்கு நிலைய உதவி ஆய்வாளர் கந்தசாமி, காவலர் வித்தியாதரன் ஆகியோருடன் நான்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.07.29 16:29:09 +0530

காரை வாய்க்கால், மரப்பாலம்VVCR நகர் ஆகிய பகுதிகளில் ரோந்து மேற்கொண்டு 13 மணிக்கு ஈரோடு மாதவ கிருஷ்ணா வீதி ராயல் ஸ்டேஜ் அருகில் கடை எண் C150 டெய்லர் கடையை கண்காணித்த போது அங்கு இரண்டு நபர்கள் செல்போனை பார்த்து துண்டு சீட்டில் எழுதிக் கொடுத்துக் கொண்டிருந்தவர்கள் எங்களை பார்த்தவுடன் ஓட முயற்சித்தவர்களை பிடித்து விசாரித்த போது தங்களது பெயர் ரவி மாதேஸ்வரன் என்றும் தாங்கள் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட கேரள மாநில லாட்டரி சீட்டுகளை ரயில்வே ஸ்டேஷன் அருகில் பெயர், விலாசம் தெரியாத நபர் ஒருவரிடம் செல்போன் மூலமாக நம்பரை பெற்று பொதுமக்களுக்கு துண்டு சீட்டில் ஆசை வார்த்தை கூறி பரிசு விழும் என நம்பி எழுதிக் கொடுப்பதாகவும் தங்களது குற்றத்தை ஒப்பு கொண்டவர்களை 3593 சம்மன் சர்வீஸ் செய்த போது வாங்க மறுத்தவர்களை 13.20 மணிக்கு எதிரிகளை கைது செய்து, அவர்கள் கைது செய்யப்பட்ட விவரத்தை குடும்ப உறுப்பினர்களுக்கு தெரிவித்தும், எதிரி ரவி தானாக முன்வந்து ஆஜர் செய்த எண்கள் எழுதப்பட்ட கேரள மாநில லாட்டரி சீட்டு துண்டுகள் ஐந்து செல்போன் ஒன்று மற்றும் பணம் ரூபாய் 500/- ஆகியவற்றையும், இரண்டாம் எதிரி மாதேஸ்வரன் என்பவரிடமிருந்து எண்கள் எழுதப்பட்ட கேரள மாநில லாட்டரி சீட்டு துண்டுகள் ஐந்து மற்றும் பணம் ரூபாய் 250/- ஆகியவற்றையும், கைப்பற்றியும் 13.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து பொதுமக்கள் சாட்சிகள் யாரும் முன் வராததால் எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டு அதில் நானும் காவலர் வித்தியாதரன் கையொப்பம் செய்தோம்.

எதிரிகளும் கையொப்பம் செய்தனர். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள முதலாவது

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.07.29 16:29:15 +0530

கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அன்றைய தினம் ஆஜர் எதிரி மாதேஸ்வரன் மற்றும் மற்றொரு எதிரியிடமிருந்து தான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது. பின்னர் எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் 14.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண்.309/25, சட்டப்பிரிவு.112(2) BNS, 5 r/w 7(3) lottery act பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவ இடத்திற்கு நாங்கள் என்ன வாகனத்தில் சென்றோம் என்றால் இருசக்கர வாகனத்தில் தான் சென்றோம். வழக்கு சம்பவ இடம் பொதுமக்கள் அதிகம் நடமாடும் பகுதி என்றால் சரிதான். தமிழக அரசால் தடை செய்யப்பட்ட அசல் லாட்டரி சீட்டுகள் எதையும் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் தொடர்பாக எதிரிகள் ஏமாற்றியதாக பொதுமக்கள் அல்லது தனி நபர் யாரும் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பொதுமக்கள் யாரையும் உதவி ஆய்வாளர் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் வைத்து உதவி ஆய்வாளர் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

நான் முதல்விசாரணையில் சொல்லியது போல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகளை கைது செய்து எதிரிகளிடமிருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், புள்ளிவிவரக் கணக்கிற்காக எனது உயர் அதிகாரிகள் கேட்டுக்

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.29 16:29:22 +0530

கொண்டதற்கு இணங்க பொய் வழக்கிற்க்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜர் உள்ளிட்ட ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.07.29 16:29:28 +0530